2023 ஜனவரி 10] [பேரவைத் தலைவர்]

தமிழுக்கும் தமிழினத்துக்கும் தொண்டாற்றுவதற்காகத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்து, தமிழ் மரபையும், பெருமையையும் எடுத்துரைக்கும், காலத்தால் அழியா எண்ணற்ற நூல்களை இயற்றிய முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்கள் "கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது" பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ii) திரு. ஆரூர் தாஸ், பிரபல வசனகர்த்தா அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆயிரத்துக்கும் மேற்பட்ட படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி திரையுலகில் தனக்கென தனி முத்திரை பதித்த திரு. ஆரூர் தாஸ் அவர்கள் 20-11-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

தன் வசனங்களின்மூலம் திரையுலகை ஆண்ட திரு. ஆரூர் தாஸ் அவர்கள் கலைமாமணி மற்றும் கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும், இரசிகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

முற்பகல் 10-05

(iii) முனைவர் ஔவை நடராசன், தமிழறிஞர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறந்த தமிழறிஞரும், கல்வியாளருமான முனைவர் ஔவை நடராசன் அவர்கள் 21-11-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

தமிழிலக்கியத்தின்மீது தீராத நாட்டம் கொண்ட முனைவர் ஔவை நடராசன் அவர்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியம்,

கம்பராமாயணம் பற்றி ஆற்றிய உரைகளால் அனைவரின் மனங்களையும் கவர்ந்தவர். தமிழில் இவருக்கிருந்த புலமையால் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு 'கலைமாமணி', 'பத்மஸ்ரீ' என விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(iv) திரு. மனோகர் தேவதாஸ், பிரபல ஓவியர் மற்றும் எழுத்தாளர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பிரபல ஓவியரும் எழுத்தாளருமான திரு. மனோகர் தேவதாஸ் அவர்கள் 7-12-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

மரபுக் கட்டடங்களை ஓவியமாக வரைவதில் மிகுந்த ஆர்வம் கொண்ட திரு. மனோகர் தேவதாஸ் அவர்கள், சிறு வயதிலேயே விழித்திரை நோயால் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டு வந்த நிலையிலும் ஊக்கம் சற்றும் குறையாமல், மதுரை மண்ணின் அடையாளங்களை அழகாகத் தீட்டி கலை, எழுத்து, சமூகப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு அனைவராலும் பாராட்டப்பெற்றதோடு, 'பத்மஸ்ரீ' விருது பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர், கலைத் துறை நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(v) மருத்துவர் D. மஸ்தான், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் துணைத் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறுபான்மையினர் நலன் மட்டுமின்றி, அனைத்து சமுதாய மக்களின் நலனிற்காகவும் முன்னின்று செயலாற்றிய மருத்துவர் D. மஸ்தான் அவர்கள் 22-12-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*